வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.5308/ஆ1/2024 நாள். .12.2024

---

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்கள் பதவி உயர்வு/பணிமாறுதல் மூலம் நிரப்புதல் – 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்தல் – அரசு உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சார்பிலான விவரங்கள் கோருதல் தொடர்பாக.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6 ந.க.எண்.077404/அ1/இ1/2024, நாள்.27.12.2024.

-----

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க, பதவி உயர்வு / பணிமாறுதல் மூலம் 2025–2026 ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கு நியமனம் செய்ய தகுதி படைத்த அரசு உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களின் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயார் செய்யும் பொருட்டு 01.01.2025 தேதியில் தகுதிபடைத்த அரசு உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமயாசிரியர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணைப்பு 1 மற்றும் 2 ல் கண்டுள்ள அரசு உயர்/மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள தலைமையாசிரியர்களின் சார்பான விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் விவரங்கள் முதன்மைக் கல்வி அலுவலக ஆ1 பிரிவில் 03.01.2025 மாலை 5.00 மணிக்குள் ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விவரங்கள் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலைக் கல்வி) ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) கருத்துருக்களை தொகுத்து முதன்மைக் கல்வி அலுவலக ஆ1 பிரிவில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இப்பொருள் சார்பான கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. பெயர்ப் பட்டியலில் தகுதியுள்ள தலைமையாசிரியர் பெயர் ஏதும் விடுபட்டிருப்பின் தலைமையாசிரியர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் நகலினை இணைத்து இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
2. அரசாணை (நிலை) எண்.528. பள்ளிக் கல்வி (ஏ1) துறை நாள் 31.12.1997ல் தெரிவித்துள்ளவாறு இணைப்பில் உள்ள அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களிடம் விருப்ப படிவத்தில் (Option Form) பதவி உயர்வு / பணி மாறுதலுக்கு விருப்பம் அல்லது விருப்பமின்மையினை பெற்று, சார்ந்த தலைமையாசிரியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் சான்றொப்பமிட்ட நகல் மற்றும் அசல் விருப்ப உரிமை படிவம் ஆகியவை அனுப்பப்பட வேண்டும்.
3. மேலும் கடந்த ஆண்டுகளில் மாவட்டக் கல்வி அலுவலரின் பதவி உயர்வு / பணிமாறுதலுக்கு விருப்பமின்மை தெரிவித்திருந்தால் மீளவும் சார்ந்த தலைமையாசிரியர்கள் புதியதாக விருப்ப உரிமை பெற்று அளிக்க கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.
4. மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு/பணி மாறுதலை தற்காலிகமாக உரிமைவிடல் செய்தவர்களில் தற்காலிக உரிமைவிடல் காலம் முடிவு பெற்றவர்கள் சார்பான விவரங்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
5. மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு / பணிமாறுதல்கள் துறைப் பதவி உயர்வு குழுவால் (Departmental Promotional Committee) பரிசீலிக்கப்படும் என்பதால், மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ள தலைமையாசிரியர்கள் சார்பான 01.01.2020 முதல் நாளது தேதி வரையிலான மந்தண அறிக்கைகள் தவறாமல் இணைத்து அனுப்ப வேண்டும். மந்தண அறிக்கைகள் பெறப்படாத தலைமை ஆசிரியர்கள் பெயர் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு/பணிமாறுதலுக்கு பரிந்துரைக்கப்பட மாட்டாது எனத்

திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நேர்வில் 2024–25 ஆம் ஆண்டுக்கான முன்னுரிமைப்பட்டியலில் பரிசீலிக்கப்பட்ட தலைமையாசிரியர்களின் பொருட்டு 01.01.2024 முதல் 31.12.2024 வரையிலான காலத்திற்குரிய மந்தண அறிக்கை இணைக்கப்பட்டால் மட்டும் போதுமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6. அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பணியிடத்திலிருந்து அரசு மேல்நிலைப் தலைமையாசிரியராக பதவி உயர்வில் சென்றவர்களின் முன்னுரிமை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முன்னுரிமைப்படியே அமையும் என தெரிவிக்கப்படுகிறது.
2025 – 2026 ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கல்வி அலுவலர் முன்னுரிமைப் பெயர் பட்டியலுக்கு பரிந்துரைக்கப்படும் தலைமையாசிரியர்கள்
<u>கீழ்க்காணும் விவரங்கள் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.</u>

i. விருப்பக் கடிதம் (Option Form).

ii. உரிய படிவம்.

iii. கல்விச் சான்றுகளின் நகல்கள் (இளங்கலை/ முதுகலை பட்டப்படிப்பு சான்று நகல்கள் மற்றும் B.Ed பட்டப்படிப்புக்கான சான்றிதழ் நகல் மட்டும் இணைக்கப்பட வேண்டும்.

iv. அசல் மந்தண அறிக்கைகள்.

v. தமிழ்நாடு குடிமுறைப் பணி விதியின் கீழ் குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டிருப்பின் குற்றச்சாட்டின் நகல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கையின் தற்போதைய நிலை மற்றும் தண்டனை அளிக்கப்பட்டிருப்பின் அதன் நகல் மற்றும் தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கான ஆவணங்கள்.

vi. பதவி உயர்வு/பணியிடமாறுதலுக்கு விருப்பம் மற்றும் விருப்பமின்மை தெரிவித்துள்ளவர்கள் சார்பாக பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்ட பதிவின் சான்றொப்பமிட்ட நகல்கள் அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. விருப்ப படிவம்.
2. முன்னுரிமைப் பட்டியல் படிவம்.

30/12/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

30/12/24

பெறுநர்

1. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி).
2. அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.